புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • செப்டம்பர், 11 2025 • புரட்சி 25 • முழக்கம் 36 • விலை ரூ.6.00

# செப்-17 முதல் டிசம்பர்-24 வரை ஜாதி எதிர்ப்பு தீவிர பரப்புரை இயக்கம் – தலைமைக் குழுவின் முடிவுகள்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம் ஈரோட்டில் 07.09.25. ஞாயிறு காலை 10.30 மணிக்கு கழக தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது.

தலைமை குழுக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பங்கேற்ற கழக தலைமைக் குழு உறுப்பினர்கள் கழகத்தின் அடுத்த கட்ட செயல்திட்டங்கள், பரப்புரைப் பயணங்கள், போராட்டங்கள், புரட்சிப் பெரியார் முழக்கம் குறித்த ஆவணமாக வெளியிடுவது பற்றி பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர்.

1) முன்னதாக கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டில் கிராம மற்றும் நகரப் பகுதிகளில் கடைபிடிக்கப்படும் ஜாதி தீண்டாமை குறித்து (முடி திருத்தகங்கள், இடுகாடு,குடிநீர் குழாய்கள்,பேருந்து போன்ற இடங்கள்) கழகத் தோழர்கள் கள ஆய்வு செய்து அது குறித்து ஆதாரப்பூர்வமான தகவல்களை திரட்டி கழகத் தலைமைக்கு அனுப்பி வைக்க கேட்கப்பட்டு பல்வேறு இடங்களில் தீண்டாமை குறித்த ஆதாரப்பூர்வமான தகவல்கள் திரட்டப்பட்டு பெறப்பட்டது.



அப்படி பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஜாதி தீண்டாமை வன்கொடுமை நடைபெறும் இடங்களில் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி கழகத்தின் சார்பில் அந்தந்த துறை சார்ந்த மாவட்ட அரசு நிர்வாகத்திடம் புகார் மனு அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இதுவரை அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் தீண்டாமை கடைபிடிக்கும் இடங்கள் மற்றும் நபர்கள் மீது எந்த விதமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதை தலைமைக் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி விவாதித்தார்கள்.

தற்பொழுதும் பல்வேறு வடிவங்களில் பட்டியல் சமூக மக்களின் மீது நிகழ்த்தப்படும் ஜாதிய தீண்டாமை வன்கொடுமைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வை நோக்கிச் செல்லும் விதமாக கோவையில் கழகத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் இருந்து கழகத் தோழர்கள் பங்கேற்கும் ஒரு மாபெரும் போராட்டம் நடத்துவது என தலைமைக் குழு முடிவு செய்தது. போராட்ட வடிவம் குறித்து தோழர்களுடன் ஆலோசித்து முடிவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

2) தமிழ்நாட்டில் ஆங்காங்கே நடைபெற்று வரும் ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு அடிப்படை காரணமாக இருக்கும் சனாதன கோட்பாடும் அதன் செயல் வடிவமாக மக்கள் மத்தியில் நிலை பெற வைக்கப்பட்டிருக்கும் பிறப்பின் அடிப்படையிலான ஜாதிய ஏற்றத்தாழ்வுகளே மூல காரணம் என்பதனை சுட்டிக்காட்டி மக்கள் மத்தியில் கழகம் தற்பொழுது தெருமுனைக் கூட்டங்களை நடத்தி வருகிறது.

"ஜாதி நமக்கு அவமானம் - மனிதம் நமக்கு அடையாளம்" என்கிற தலைப்பில் கழகத்தின் சார்பில் தற்பொழுது நடைபெற்று வரும் பரப்புரை கூட்டங்கள் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. இப்பரப்புரை கூட்டங்கள் மக்கள் மத்தியில் இறுகி கெட்டிப்பட்டு போய் இருக்கும் ஜாதிய மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி ஜாதி குறித்த சிந்தனை மாற்றத்திற்கு வழி வகுக்கிறது. தற்போது சென்னை, சேலம், திருப்பூர், கோவை, மயிலாடுதுறை ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் இப்பரப்புரைக் கூட்டங்களை இன்னும் விரிவாக வீச்சாக தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் சார்பில் நடத்துவது

**புதிய தலைமைக்குழு உறுப்பினர்களாக கீழ்கண்ட தோழர்கள் இணைக்கப்படுகிறார்கள்.**

1. கோவிந்தராஜ் (மேட்டூர்)
2. நிர்மல்குமார் (கோவை)
3. கேப்டன் அண்ணாதுரை (குமாரபாளையம்)
4. மனோகரன் (திருச்சி)
5. திருவேங்கடம் (பேராவூரணி).
6. இராமர் (கடுவனூர்)

கொளத்தூர் மணி
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்
08.09.2025

- தொடர்ச்சி 2-ம் பக்கத்தில்

# உணர்வலைகளில் மூழ்கிய சீர் விருது வழங்கும் விழா

● சீர் விருது வழங்கும் விழா ஈரோடு மல்லிகை அரங்கில் 07-09-2025 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

● விழா அரங்கத்திற்கு 100 மீட்டர் தூரத்திலிருந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணியை தோழர்கள் கொள்கை முழக்கத்துடன் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

● விழா சரியாக மாலை 5 மணிக்கு தொடங்கி 9 மணிக்கு நிறைவடைந்தது

● ஜாதி, மத எதிர்ப்பு இசைப் பாடல்கள் பாடி அரங்கத்தை சூடேற்றினர். உணர்வுகளை பார்வையாளர்களிடம் கடத்தியது. “போராடடா” என்ற பாடலில் பார்வையாளர்களும் மேடைக்கு வந்து நடனமாடிய காட்சி உணர்ச்சி அலைகளைத் தட்டி எழுப்பியது.

● திருநங்கை நேகா குழுவினரின் QUEER நாடகம் அரங்கேறியது. பால்புதுமையினர் (LGBTQ) பற்றிய புரிதலை ஏற்படுத்தும் விதமாக நாடகம் அமைந்தது.

● வழக்கறிஞர் ப.பா மோகன் நாடகக் குழுவினரைப் பாராட்டி நினைவுப் பரிசினை வழங்கினார். கழகத் தலைவரைப் பாராட்டி வாழ்த்துரை ஆற்றினார்.

● கழகத் தலைவர் கொளத்தூர் மணி பற்றிய 50 நிமிட ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டது.

● குடிஅரசுத் தொகுப்பில் தோழர்களின் உழைப்பு, சந்தித்த எதிர்ப்புகள், சட்டப் போராட்டங்கள், இதழ்களின் தேடல்கள் குறித்து கொளத்தூர் மணி ஆவணப்படத்தில் விரிவாக விவரித்தார்.

● கொளத்தூர் மணியின் தலைமைப் பண்பு குறித்து தோழர்கள் ஓவியா, காவலாண்டியூர் ஈசுவரன், பேராசிரியர் வீ.அரசு ஆகியோர் கருத்துக்களை பதிவு செய்திருந்தனர்.

● குடும்ப வாழ்க்கை குறித்து கழகத் தலைவரின்




இளவல் பழனிச்சாமி தலைவரது துணைவியார் கமலம், மகள்கள் நாத்திகராணி, அறிவுச் செல்வி ஆகியோர் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

● ஜாதி மறுப்பு இணையர்களுக்கு அடைக்கலம் தரும் கழகத்தின் கோட்டையான காவலாண்டியூர் குறித்து ஆவணப்படம் பேசியது. ‘சின்னத்துரை’ என்ற திரைப்படத்தில் காவலாண்டியூர் ஜாதிமறுப்பு இணையர்களுக்கு பாதுகாப்பு தரும் காட்சி இடம் பெற்று இருந்தது. திரைப்படத்தில் இருந்த அக்காட்சியை இந்த ஆவணப்படம் சித்தரித்து இருந்தது.



● காவலாண்டியூர் கழகப் பொறுப்பாளர் ஈசுவரன் ஜாதி மறுப்புத் திருமணங்களை எதிர்ப்புகளுக்கிடையே நடத்தி வருவதை விவரித்தார்.

● குடிஅரசு தொகுப்புக்கு தோழர் கொளத்தூர் மணி முழு பொறுப்பையும் சுமந்து செயல்பட்டதையும், ஜாதி தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தில் கழகம் பின்பற்றிய நடைமுறைகள் மற்றும் கொள்கைப் பார்வைகள் குறித்தும் விடுதலை இராசேந்திரன் தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

● கழக செயல்பாடுகளுக்கும் கழகத் தலைவருக்கும் பெருமை சேர்க்கும் இந்த ஆவணப்படம் கழக தோழர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும் பெருமித உணர்வுகளையும் எழுப்பியது.

● தோழர் கொளத்தூர் மணி பேச்சும் எழுத்தும் 2 தொகுதிகள் வெளியிடப்பட்டன. நூலை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட முதல் தொகுதியை நாளை விடியும் பி. இரெ. அரசெழிலனும், 2வது தொகுதியை மேட்டுப்பாளையம் மருத்துவர் மகேஷ்வரனும் மற்றும் தலைமைக் குழு உறுப்பினர்களும் பெற்றுக் கொண்டனர்.

● கழகத் தலைவருக்கு சீர் விருதை பேராசிரியர் வீ.அரசு வழங்கினார், ரூ.1,00,000 விருது தொகையை பேராசிரியர் கண்ணம்மாள் தலைமையில் சீர் வாசகர் வட்டம் வழங்கியது.

● கழகத் தலைவருக்கு தமிழ்நாடு அரசு வெளியிட்ட அம்பேத்கரின் முதல் 10 தொகுதிகள் மற்றும் என்.சி.பி.அய் வெளியீடான கவிஞர் ‘தமிழ்ஒளி’ எழுத்துக்களின் 6 தொகுதிகளை பேராசிரியர் வீ.அரசு வழங்கினார். பேராசிரியர் மங்கை நினைவுப் பரிசு வழங்கினார்.

● சன் நியூஸ் வலையொலி (youtube) முழு நிகழ்வையும் நேரடியாக ஒளிபரப்பியது.

● ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், திமுக மாநகரச் செயலாளர் பாலசுப்பிரமணியம் கழக தலைவருக்கு ஆடை போர்த்தி பாராட்டினர்.

● திராவிடர் இயக்கப் பற்றாளர் பாலு கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கினார்.

● ஈரோடு, சேலம், திருப்பூர், நாமக்கல், மதுரை, கோவை ஆகிய மாவட்டப் பொறுப்பாளர்களும், கழகத் தோழர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

பேராசிரியர் வீ.அரசு உரை 3-ம் பக்கத்தில்.

## தலையங்கம்

# பாஜக பிடியில் திணறும் அஇஅதிமுக

பார்ப்பனிய பாரதிய ஜனதா கட்சியின் பிடியில் அஇஅதிமுக சிக்கி சீர்குலைந்து வருவதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்து வருகிறார்கள். எம்.ஜி.ஆர் அவர்களால் தொடங்கப்பட்ட அஇஅதிமுக, திமுகவுக்கு மாற்று அரசியல் சக்தியாக உருவெடுத்து தமிழ்நாட்டு அரசியலில் வலிமையான சக்தியாக பரிணமித்தது. இந்தி எதிர்ப்பு, மாநில உரிமை, இட ஒதுக்கீடு கொள்கைகளின் வழியாக மட்டுமே திராவிட இயக்கத்தின் அடையாளத்தைப் பேணியது. அதே நேரத்தில் இந்து மத அடையாளத்தை தீவிரமாக ஏற்றுக் கொண்டது.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த ஆர்.எம்.வீரப்பன் பார்ப்பனியத்தின் ஆதரவாளரானார். அறநிலையத்துறை வழியாக பார்ப்பனியக் கலாச்சாரத்தை உயர்த்திப் பிடித்தார். காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரஸ்வதி வடநாடு யாத்திரையை முடித்து தமிழ்நாடு திரும்பிய போது, வேலூர் அருகே தமிழ்நாட்டின் எல்லையில் அவரை தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்றார். சங்கராச்சாரியை கை ரிக்ஷாவில் அமர வைத்து அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் இழுத்து வந்து தனது பார்ப்பனிய அடிமைத்தனத்தை பெருமையுடன் பறை சாற்றினார். பார்ப்பனர்- பார்ப்பனர் அல்லாதார் பருப்பு இனி தமிழ்நாட்டில் வேகாது என்று பேசினார். காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரனை அழைத்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர் பண்பாட்டு விழாவை நடத்தினார். உலகத்தமிழ் மாநாட்டை அதே சங்கராச்சாரியாரை வைத்து எம். ஜி.ஆர் தொடங்கினார். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அறநிலைத்துறையையே காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரனிடம் ஒப்படைத்துவிட்டார். அறநிலையத்துறையின் ஆலோசனை கூட்டங்கள் காஞ்சி சங்கரமடத்தில் நடந்தன. துறை அமைச்சர்களும் அதிகாரிகளும் காஞ்சி சங்கரமடத்திற்குப் போய் அதில் கலந்து கொண்டார்கள்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதை ஆதரித்தவர் ஜெயலலிதா. கரசேவைக்கு ஆட்களையும் அனுப்பி வைத்தார். பிற்காலத்தில் இதே சங்கராச்சாரியை ஜெயலலிதா கைது செய்தமைக்கு காரணம் சங்கராச்சாரியின் கொள்கைகளை எதிர்த்து அல்ல! மாறாக அது தனிப்பட்ட பிரச்சனை சார்ந்தது. மத மாற்றத்துக்கான தடைச் சட்டத்தை கொண்டு வந்தார். தேர்தல் தோல்விக்குப் பிறகு அதை மாற்றிக் கொண்டவர் ஜெயலலிதா. பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டபோது அந்த இயக்கத்தின் தலைமை ஆலோசனைக் கூட்டத்தை தமிழ்நாட்டில் கோவையில் நடத்த அனுமதித்தார். இப்படி நீண்ட பட்டியலிட முடியும்.

அஇஅதிமுக திராவிட முத்திரையுடன் இந்துத்துவா கொள்கைகளையும் அரவணைத்துக் கொண்டது என்பதற்காகவே தான் இவற்றை சுட்டிக்காட்டுகிறோம். தமிழ்நாட்டு அரசியலில் ராஜகோபாலாச்சாரிக்குப் பிறகு தங்களுக்கு கிடைத்த ஒரே தலைவர் ஜெயலலிதா என்று பார்ப்பனர்கள் கொண்டாடினார்கள். ஆன்மீக குருவாக பார்ப்பனர்கள் ஏற்றுக்கொண்ட காஞ்சி ஜெயேந்திரனையே கைது செய்தாலும் அதையும் சகித்துக் கொண்டு ஜெயலலிதாவை உறுதியாக பார்ப்பனர்கள் ஆதரித்தார்கள். பார்ப்பனியத்தையும், இந்துத்துவாவையும் உள்வாங்கிக் கொள்ளும் அமைப்பாக அஇஅதிமுக மாற்றம் பெற்றது. இதுவே பாரதிய ஜனதா எளிதாக ஊடுருவ பாதையை உருவாக்கிவிட்டது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அவரது நிழலாக இருந்த சசிகலா முதல்வர் பதவியை ஏற்க விடாமல் தடுத்து ஊழல் வழக்கில் அவரை சிறைக்கு அனுப்பினார்கள். மக்கள் ஆதரவு இல்லாத சசிகலாவின் நியமன முதலமைச்சரான எடப்பாடி பழனிச்சாமிக்கு, முதலமைச்சர் என்ற மாபெரும் அதிகாரப் பரிசு திடீரென்று கிடைத்ததால் அவர் அந்த பதவியில் சுகம் கண்டு நீடிப்பதைத் தவிர வேறு எந்த கொள்கைகளும் தேவையே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

தொடர்ந்து அஇஅதிமுகவை உடைக்கும் ‘கரசேவை’களை பாஜக தொடங்கியது. ஓ.பன்னீர் செல்வம் தர்மயுத்தம் நடத்த பாஜக தூண்டியது. இரண்டு அமைப்புகளாக அக்கட்சி உடைந்தது. பாஜகவிடம் அதிகாரம் இருந்த காரணத்தால் இரண்டு அணியினருமே பாஜகவின் ஆதரவுக்காகவும், தயவுக்காகவும் போட்டி போட்டார்கள். நிலைமையை தனக்கு சாதகமாக்கி இரு அணிகளையும் பகடைக்காய்களாக அரசியல் சதுரங்கத்தில் உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. அண்மையில் செங்கோட்டையன் பிரச்சனை வரை இந்த விளையாட்டுதான் தொடர்கிறது.

அஇஅதிமுகவை பலவீனமாக்கி அந்த இடத்தில் தமிழ்நாட்டு அரசியலில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு இந்த விளையாட்டை பாஜக அரங்கேற்றி வருகிறது. ஆனாலும் இந்த அரசியல் ஆபத்துகளைபற்றி அஇஅதிமுக தலைவர்களுக்கு எந்த கவலையோ, அவமானமோ இல்லாமல் போனது ஏன்? கட்சியை பாஜக சிதைக்கிறது என்பதை நன்றாக உணர்ந்தும், பாஜகவின் சூழ்ச்சிக்கு எதிராக அஇஅதிமுகவின் எந்த அணித் தலைவரிடமிருந்தும் எதிர்ப்புக் குரல் வராமல் போனது ஏன்? மீண்டும் மீண்டும் பாஜகாவின் அரவணைப்புக்கு பரிதவிப்பது ஏன் ஏற்கனவே இந்துத்துவ அரசியலை அக்கட்சி உள்வாங்கி கொண்டதுதான். அதன் காரணமாகவே பாஜகவின் கொள்கைகளுக்கு உடன்படும் போக்குக்கு அக்கட்சி தயார் செய்யப்பட்டுள்ளது என்பதுதான் இதற்கு காரணம். மக்களின் உடனடி ஆதரவுக்காக கொள்கைப் பாதையில் இருந்து விலகிச் செல்லாமல் உரிய கவனத்துடன் செயல்பட வேண்டும் என்ற எச்சரிக்கையைத்தான் இதிலிருந்து பெற வேண்டும்.

ஒரு உண்மையான திராவிட இயக்கம் மத அடையாளங்களை ஏற்றுக் கொண்டால் அது ஜாதி உணர்வுகளை வளர்த்து, இனம், மொழி அடையாளங்கைக் கூட பின்னுக்கு தள்ளிவிடும் ஆபத்துக்கள் உண்டு. கலைஞர் ஆட்சிக் காலத்தில் அறநிலையத்துறை அரசு எல்லைக்குள் நின்றே செயல்பட்டது. இந்து மத உணர்வுகளை ஊட்டி வளர்க்கவில்லை.இப்போது அதற்கு நேர்மாறாக திராவிட மாடல் ஆட்சியை இந்துக்களின் ஆட்சியாக மெய்ப்பிக்க அறநிலையத்துறை தவிர்த்து தீவிரம் காட்டுகிறது. கரை வேட்டி கட்டிக் கொணடு கையில் கயிறு கட்டுவதை தவித்து விடுங்கள் என்று திமுக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா இளைஞர்அணியினரிடம் கூறினார்.

“இது கழகத்தின் கருத்து அல்ல; அவரது சொந்த கருத்து” என்கிறார் அமைச்சர் சேகர்பாபு. கரூரில் நடைபெற உள்ள தி.மு.கவின் முப்பெரும் விழா பந்தலுக்கு அமைச்சர் செந்தில் பாலாஜி முன்னிலையில் ‘பிராமணர்கள்’ வேத மந்திரம் ஓதி, பூமிபூஜை போடும் காட்சிகள் ஊடங்களில் வெளிவந்துள்ளன. இதற்கு கட்சித் தலைமை எப்படி அனுமதிக்கிறது? அறநிலையத்துறை அமைச்சராக இருந்த ஆர்.எம். வீரப்பன் அன்று எம்.ஜி.ஆர் காலத்தில் தொடங்கி வைத்த பார்ப்பனியம் தான் இன்று அஇஅதிமுகவை இந்துவமயமாக்கி இருக்கிறது. அதே தவறை இப்போது அறநிலையத்துறை செய்துவிடக் கூடாது. அனைத்து துறைகளிலும் சாதனை படைக்கும் திமுக தலைமை இந்த சறுக்கலுக்கு வழிவிடக் கூடாது என்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

# கடவுளுக்கு மாநாடு எதற்கு?

அர்ச்சனை, வழிபாடு, சடங்குகள் மட்டுமே நடத்தப்பட்டு வந்த இந்து கடவுள்களுக்கு, இப்போது சர்வதேச மாநாடுகள் நடக்க தொடங்கிவிட்டன.

இதற்கு வழிகாட்டியதே தமிழ்நாடு இந்து அறநிலையத்துறைதான்!

முருகனுக்கு சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி வழியாக அதை தொடங்கி வைத்தார். இப்போது திருவாங்கூர் தேவசம் போர்டின் பவள விழாவை முன்னிட்டு, சர்வதேச அய்யப்பன் மாநாடு, பம்பையில் வரும் செப் 20-ம் நடக்க இருக்கிறது. ஏழு மாநில முதல்வர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள், தமிழ்நாடு அரசு சார்பில் இரண்டு அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்.

10 வயதில் இருந்து 50 வயதுக்கு உட்பட்ட பெண்கள் சபரிமலை அய்யப்பன் கோயிலில் அனுமதிக்கப்படுவது இல்லை.உச்ச நீதிமன்றம் இது "மதத் தீண்டாமை "என்று அறிவித்த பிறகும், தீர்ப்பு அங்கே அமலாகவில்லை.

தேவசம் போர்டு தலைவர் பிரசாந்த் நேற்று அளித்த பேட்டியில், அய்யப்பன் பக்தர்களாக நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே இந்த மாநாட்டில் அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறியிருக்கிறார். இக்கூற்றின்படி பெண்கள் அனுமதிக்கப்படுவார்களா? என்பது தெரியவில்லை.

முதலமைச்சர்களுக்கு மட்டும் தான் அழைப்பு; அரசியல்வாதிகளுக்குக் கிடையாது என்றும் அவர் கூறியிருக்கிறார். அய்யப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பது குறித்து தேவசம்போர்டு ஏற்கனவே நீதிமன்றத்தில் ஒப்புதல் தந்திருந்தாலும், இப்போது அதை மறு பரிசீலனை செய்வதாக தேவசம் போர்டு தலைவர் நேற்று பேட்டியில் கூறியிருக்கிறார். பெண்களை அனுமதிக்க மறுப்பதில் தேவசம்போர்டு உறுதியாக இருக்கிறது.

மாநில முதலமைச்சர்களுக்கு அழைப்பு கடிதம் அனுப்பிய கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தான், மாநாட்டை திறந்து வைக்க இருக்கிறார். ஒரு மதத்தின் பெயரால் நடக்கும் மாநாட்டிற்கு கேரள அரசு நிதி ஒதுக்கி செலவிடக்கூடாது என்று எம்.நந்தகுமார் என்பவர் கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கிற்கு பதில் அளித்த கேரளஅரசு, இதுகுறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என்பதைத்தான் பதிலாக தந்திருக்கிறது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி பெண்களுக்கு எதிரான பாலின ஒதுக்கலையும், தீண்டாமையையும் நியாயப்படுத்தும் ஒரு கடவுளின் மாநாட்டுக்கு அரசும் முதலமைச்சர்களும் பங்கேற்கலாமா?

கோயில்களில் இருந்து அரசும் அறநிலையத்துறையும் வெளியேற வேண்டும் என்று கூப்பாடு போடுகிறவர்கள் இப்போது எங்கே போனார்கள்? கடல் தாண்டிப் போவது இந்து சாஸ்திரங்களுக்கு எதிரானது என்று அய்தீகம் பேசுகிறவர்கள் சர்வதேச மாநாடுகளை ஏற்கிறார்களா?

இத்தகைய மாநாடுகளை நடத்துவதற்கு ஆகமங்கள் அனுமதிக்கிறதா? அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கு மட்டும்தான் ஆகமம் தடை போடுமா!...

**விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**
*02.09.2025*

### முதல் பக்கம் தொடர்ச்சி

என்று தலைமைக்குழு முடிவு செய்தது. பரப்புரை கூட்டங்களில் கலை வடிவங்களில் கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துரைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பரப்புரை கூட்டங்கள் நிறைவடையும் டிசம்பர் 24ஆம் தேதி தந்தை பெரியாரின் நினைவு நாளில் கோயம்புத்தூரில் ஜாதி தீண்டாமைக்கு எதிராக அரசின் சட்ட நடவடிக்கையை வலியுறுத்தி மாபெரும் போராட்டத்தை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3) கழகத்தின் சார்பில் வார இதழாக தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் "புரட்சிச் பெரியார் முழக்கம் ஆவணம்" வெளியிடுவது குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்படி கழகம் தமிழ்நாடு அளவில் நடத்திய மிகப்பெரிய போராட்டங்கள், அதில் சிறைப்பட்ட தோழர்கள்,அவற்றின் புகைப்பட பதிவுகள், கழகம் நடத்திய மாநாடுகள், அவற்றில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் ஆகியவை தொகுக்கப்பட்டு இவை அடங்கிய ஒரு வரலாற்று ஆவணமாக புரட்சிப் பெரியார் முழக்க மலரை வெளியிடுவது என்று தலைமைக் குழு தீர்மானித்தது.

தொடர்ந்து கழகம் வெளியிட்டுள்ள நூல்களின் விற்பனையை அதிகப்படுத்துவது,இணையதள செயல்பாடுகளை மேம்படுத்துவது ஆகியவை குறித்தும் தலைமைக்குழு விவாதித்தது. பிற்பகல் 02.00 மணியளவில் தலைமைக் குழு கூட்டம் நிறைவடைந்தது.

தலைமைக் குழு கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம.இளங்கோவன், அன்பு தனசேகரன், சூலூர் பன்னீர்செல்வம், காவலாண்டியூர் ஈஸ்வரன், சென்னை உமாபதி, மயிலாடுதுறை இளையராஜா, விழுப்புரம் அய்யனார், சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன் ஆகிய தோழர்கள் பங்கேற்றனர்.

**செய்தி- பரிமளராசன்** (சமூக ஊடகப் பொறுப்பாளர்)

**அடுத்த இதழில்....**

கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை, கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் விருது ஏற்புரை, கழகத்தின் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்.

# கொளத்தூர் மணியின் மிகச்சிறந்த ஆய்வுகளின் தொகுப்பு – பேரா.வீ.அரசு

எதிர்நீச்சல் போட்டு குடிஅரசு தொகுப்பை வெளியிட்டு பதிப்புத் துறையில் சாதனை புரிந்த திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு சீர் வாசகர் வட்டம் சிறந்த பதிப்பாளர் விருது வழங்கி ஒரு லட்சம் பணம் முடிப்பையும் வழங்கியது. விருது வழங்கி சிறப்புரையாற்றினார் பேராசிரியர், சென்னை பல்கலைக்கழக மேனாள் தமிழ் இலக்கியத்துறை தலைவர் வீ.அரசு. அவரது உரையில் இருந்து..

சீர்வாசகர் வட்டம் தோழர் மணி அவர்களுக்கு இந்த ஆண்டுக்கான இந்த விருதை வழங்குகிறது. தோழர் மணி என்ன செய்திருக்கிறார்? நாங்கள் எல்லாம் 19-ஆம் நூற்றாண்டில் உருவான மார்க்ஸ், எங்கல்ஸ் உலகத்துக்கு தந்த ஒரு மிகப்பெரிய தத்துவ மரபின் மீது ஈடுபாடு கொண்டு அதை வாசித்தவர்கள், அதோடு வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள். அது உலகம் முழுவதும் என்னென்ன வடிவத்தில் எப்படி எப்படி எல்லாம் மாற்றிக்கொண்டும் செயல்பட்டுக் கொண்டும் இருக்கிறது என்பது பற்றி மிகுந்த அக்கறை உடையவர்கள்.




லத்தின் அமெரிக்க நாடுகளிலே அது செயல்படுகிற முறையிலும், ஆப்பிரிக்க நாடுகளிலே அது செயல்படுகிற முறையிலும் ,இப்படி சீனாவிலேயும் ரஷ்யாவிலேயும் இப்படி பல வடிவங்களில் அந்த தத்துவ மரபுகளின் செயல்படுகிற முறைகளையும் நாம் அறிவோம்.

ஆனால் தமிழ்ச் சமூககத்திற்கு வருகிறபொழுது அந்த தத்துவ மரபை நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டும். தோழர் மணி அவர்களுடைய அந்த அறிவு சிந்தனை மரபு சார்ந்த கருத்துகளில் ஓரிரண்டை மட்டும் நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அந்த தத்துவம் நம்முடைய மண்ணில் நம் ஊரில் எப்படி வளர்ந்தது? அது சார்ந்து நாம் என்ன செய்திருக்கிறோம், என்பது மிக முக்கியமானது.

**மார்க்சியசத்தின் மேல் நம்பிக்கை உடையவர்கள் பெரியாரை வாசிக்கிற பொழுது பெரியாருக்கும் மார்க்சியத்துக்கும் என்ன தொடர்பு என்ற புரிதலைப் பெற வேண்டும் என்று சொன்னால் தோழர் மணி அவருடைய பேச்சும் எழுத்தும் நமக்கு கலங்கரை விளக்கமாக இருக்கிறது.**

அது பற்றி பெரியார் 1925-ல் இறுதியில் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம் தொடங்கி 1938 வரையான அந்த காலங்களில் பெரியார் என்ன பேசினார்? பெரியார் சோவியத்யூனியனுக்கு சென்று வந்த பிறகு என்ன பேசினார்? பெரியாரோடு சிங்காரவேலரும், ஜீவாவும், சாத்தான்குளம் ராகவனும் இப்படி பல பல கம்யூனிஸ்ட்கள் அவரோடு ஏன் சேர்ந்தார்கள்? அதன் விளைவாக ஈரோட்டில் உருவான ஒரு "சுயமரியாதை சமதர்ம கட்சி" என்ற ஒரு கட்சியை ஏன் உருவாக்கினார்கள். இவை அனைத்துக்கும் தொடர்பு உண்டு.

சுயமரியாதை சமதர்ம கட்சி மார்க்சிய சிந்தனைகளுக்கு தமிழ் மரபுக்கு ஏற்றவாறு கொள்கைத் திட்டங்களை வகுத்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு செயல்திட்டம் உள்ளதுபோல் பெரியார் சுயமரியாதை தத்துவ அடிப்படையில் உருவாக்கிய இந்த கட்சிக்கும் செயல்திட்டம் உண்டு. 1925-1938 என்ற அந்த காலங்களை புரிந்து கொள்வதற்கும் அதில் பெரியார் செயல்பாடுகளை புரிந்து கொள்வதற்கும் முக்கியமான காலமாக இருந்திருக்கிறது. இதை தோழர் மணி மிகச் சிறப்பாக பதிவு செய்துள்ளார்.




தன்னை அம்பேத்கரிஸ்ட் என்பார்கள்; தன்னை பெரியாரிஸ்ட் என்பார்கள்; அம்பேத்கரிஸ்ட் மார்க்சிஸ்ட் என்பார்கள்; பெரியாரிஸ்ட் மார்க்சிஸ்ட் என்பார்கள், இதெல்லாம் ரொம்ப ஒரு வியப்பளிக்கக்கூடிய ஜோக்.

மார்க்சியத்தின் தமிழ் வடிவமாக சுயமரியாதை மரபுகளை தன்னுடைய புரிதல் சார்ந்து கட்டமைத்தவர் பெரியார், அதுதான் முக்கியம். அந்த கட்டமைத்த மரபு வழியாக அவர் பேசியது முக்கியம். அவர் பேசிய கருத்துக்களை இன்றைக்கு நாம் எப்படி உணர்கிறோம், புரிந்து கொள்கிறோம் என்பது முக்கியம்.

அதே போல்தான் அவர் சுயமரியாதை இயக்கம் பற்றி பேசுகிற பேச்சு கொளத்தூர் மணி தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒரு மிக முக்கியமான பேச்சு. 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடு பற்றிய ஒரு பேச்சு இருக்கிறது. நான் அந்த 1929 சுயமரியாதை மாநாடு பற்றி நிறைய வாசித்திருக்கிறேன். நண்பர்களே! அந்த மாநாட்டில் கொண்டுவந்த தீர்மானங்கள் மற்றும் செயல்திட்டங்கள் எல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை அறிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது தான். இன்னும் சொல்லப்போனால் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் வேறு ஒரு வடிவமாக தமிழ்ச் சமூகத்திற்கான வடிவமாக அதை சொல்லலாம்.

1937ல் நீதிக்கட்சியோடு பெரியார் இணைந்து செயல்பட வேண்டும் என்ற ஒரு சூழல் வருகிற பொழுது பெரியார் அவர்களுக்கு ஒரு கொள்கை ஆவணத்தை தருகிறார். ஒரு 14 வகையான திட்டங்களை அதில் விவரிக்கிறார். அவை அனைத்துமே கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம்தான். இந்தத் திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால் நான் உங்களுக்கு ஆதரவாக இருப்பேன் என்று சொன்னவர் பெரியார். தோழர் மணி இந்த அரிய கருத்தை பதிவுச் செய்துள்ளார்.

பெரியார் மார்க்சியத்தை எப்படிப் புரிந்து கொண்டார்; தன் வாழ்வில் மார்க்சியத்தை எப்படி கடைபிடித்தார்; பெரியாரை விட்டு மார்க்சியர்கள் எப்படி விலகினார்கள்; மார்க்சியத்தை தமிழ்ச் சூழலில் பெரியார் சிந்தனையிலிருந்து நாம் எப்படி கண்டறிவது என்பது பற்றியான கொளத்தூர் மணியின் இந்த ஆய்வு வேறு எந்த திராவிட இயக்கத்தைச் சார்ந்த ஆய்வாளர்களால் விரிவாக பேசப்பட்டிருக்கிறதா என்பது எனக்கு தெரியவில்லை.

நம்முடைய தோழர் விடுதலை இராசேந்திரன் அவருடைய எழுத்துக்களில் அவற்றை சிலவற்றைக் காண முடியும். இப்படியான புரிதலை உருவாக்குவதன் மூலம் என்னைப் போன்ற பல இளைஞர்களுக்கு சரியான பார்வை கிடைக்கிறது. இளம் வயதிலிருந்தே நான் ஒரு பெரியாரிஸ்டாக வளர்ந்தவன் ஆனால் கல்லூரிப் படிப்பு வருகிற பொழுது என்னை மார்க்சியம் ஆட்கொள்கிறது. அப்பொழுது வருகிற முரண் பெரியார் மார்க்சிஸ்டோடு சேர முடியுமா? சேர முடியாதா? என்ற ஒரு கேள்வி. அதற்கு மிக அழகான பதிலை மணி அவர்களுடைய பேச்சு சொல்கிறது.

ஒவ்வொரு காலங்களிலும் மார்க்சியம் சமூக நிகழ்வுகளோடு இணைத்துக் கொண்டு மாற்றம் பெற்று அது சரியான செயல்பாடாக வளர வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை பெரியாருடைய அந்த சுயமரியாதை இயக்க மரபுச் சார்ந்த செயல்பாடுகளோடு புரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தை இந்த சமூகத்திற்கு வழங்கியதில் தோழர் மணி அவர்களுக்கு மிகப்பெரிய பங்குண்டு. இதற்காக நாம் அவருக்கு என்றும் நன்றி கடன்பட்டிருக்கிறோம்.

சுயமரியாதை இயக்கம் பற்றிய அவருடைய புரிதலும் மிக மிக முக்கியமானது. 1925லிருந்து 1938 வரை 28 தொகுதிகளாக மணி தொகுத்திருக்கிற அந்த குடிஅரசு இதழ்கள் மிக முக்கியமான ஆவணம். நான் சொல்லுகிற இந்தக் கால செயல்பாடுகள் மிக முக்கியமாக இருக்கிறது.

பெரியார் பற்றி இருக்கக்கூடிய ஒரு வகையான ஒவ்வாமையையும் கம்யூனிஸ்ட்கள் மத்தியிலே இருக்கக்கூடிய சிக்கல்களை உடைத்தெறிந்ததிலும் தோழர் மணி அவர்களுக்கு முக்கியமான பங்களிப்பு இருப்பதாக நான் கருதுகிறேன். இந்த 28 தொகுதிகளை நீங்கள் வாசித்தீர்கள் என்று சொன்னால் பெரியார் சோவியத்துக்கு சென்றது; பெரியார் இங்கிலாந்தில் பேசியது; பெரியார் சிங்காரவேலரோடு உரையாடியது; ஜீவா சிங்காரவேலரோடு சண்டை போட்டது; பேன்ற வரலாறுகளை அறிய முடியும். இந்தியாவில் 1934ல் கட்சிகள் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு தடை செய்யப்படுகிறது.

அந்த காலங்களில் பெரியாருடைய இயக்கத்திற்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் மிகப்பெரிய நெருக்கடி உருவானது. இந்த நெருக்கடியை பெரியார் எப்படி எதிர்கொண்டார்? இயக்கத்தை முன்னெடுப்பதற்கு எத்தகைய அணுகுமுறையை மேற்கொண்டார் என்பதை இந்த தொகுப்பு விளக்குகிறது.

எனவே நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில் தோழர் மணி என்ற ஒரு சமூக அறிவியலாளர்; சமூகப் போராளி; சமூகத்தைப் பற்றியான ஒரு தெளிவான புரிதலோடு தோழர் மணியின் வாழ்க்கைப் பயணம் அமைந்திருக்கிறது. உள்ளூர் களப் போராளியாக அவர் செயல்பட்டிருப்பது தான் மிகப் பெரிய சாதனை. எதிர்நீச்சலோடு தான் இந்த களப்பணியை செய்ய முடியும்.

ஒரு நேர்மையான அரசியல் புரிதல் உள்ள நபர்கள் தான் பொதுவாழ்வில் உள்ளூர் போராளியாக சாதிக்க முடியும். அந்த வகையில் மணி அந்த காலங்களில் நிறைய சாதித்திருக்கிறார்.

**– தொடரும்....**

# உலக ஆய்வாளர்கள் பங்கேற்ற பெரியார் கருத்தரங்கம்

தொன்மையான தமிழ் பண்பாடு உலக சிந்தனைக்கு அளித்த எத்தனையோ கொடைகளில் இரண்டினை முதன்மைப்படுத்திச் சொல்ல வேண்டும் என்றால் அது ஐயன் திருவள்ளுவரின் திருக்குறளும், பெரியாரின் சிந்தனைகளும் எனலாம். திருவள்ளுவர் தொடர்ந்து மொழியாக்கம் செய்யப்பட்டு வந்திருக்கிறார். லண்டனில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருக்குறளை 1886-ஆம் ஆண்டே மொழியாக்கம் செய்த ஜி.யு.போப் அவர்களின் கல்லறைக்கு சென்று மரியாதை செலுத்தியுள்ளார். அதனால் திருக்குறள் உலகில் பரவலாக அறியப்பட்டது.

பெரியாரைப் பொறுத்தவரை அவர் தன் சிந்தனைகளைத் தொகுத்து நூலாக எழுதவில்லை. ஒரு சில பிரசுரங்கள் அவர் பெயரில் வந்துள்ளனவே தவிர, ஒரு விரிவான அரசியல் தத்துவ நூலாகவோ, சித்தாந்த நூலாகவோ எழுதவில்லை. மாறாக அவர் தொடர்ந்து மக்களிடையே பிரச்சாரம் செய்து பெரும் சிந்தனைப் புரட்சியை பொதுமன்றத்தில் உருவாக்கியவர். செயல்முறை தத்துவம் (philosophical praxis) என்பதை மேற்கொண்டவர். கற்றோருக்கான நூல்களை எழுதுவதைவிட, அனைத்து மக்களையும் சிந்திக்க வைத்து சுயமரியாதையை சுடர் விடச் செய்வதையே அவர் முக்கியப் பணியாகக் கருதினார்.

அவர் வாழ்நாளிலேயே அவர் உரைகளின் எழுத்து வடிவங்களும், எழுத்துக்களும் தொகுக்கப்பட்டு வெளிவந்தாலும் அவை மொழியாக்கம் செய்யக் கடினமானவை என்பதால் பெருமளவு அவ்விதம் நடந்து வெளியுலகில் பரவவில்லை. மேலும் கல்விப்புலத்தில் நிறைந்திருந்த பார்ப்பனர்களுக்கும், பிற மேல் தட்டினருக்கும் அவரைக் குறித்த சரியான புரிதல் இல்லை. இடது சாரி சிந்தனையாளர்கள் பலருக்-கும் கூட அவரைக் குறித்த சரியான புரிதல் இருக்கவில்லை. அதனால் அவருடைய அளப்பரிய அரும்பணி, மானுடவரலாற்றில் அவர் உருவாக்-கிய தனித்துவமிக்க சிந்தனைப் புரட்சியின் சிறப்பம்சங்கள் உலக அரங்-கில் விவாதிக்கப்பட கணிசமான காலதாமதம் ஆகியுள்ளதைப் புரிந்து-கொள்ள முடியும்.

> **பெரியாரைக் குறித்து கருத்தரங்கம் நடத்துவதால் ஆக்ஸ்போர்டு பல்கலைக்-கழகத்திற்குத்தான் பெருமையே தவிர, அதனால் பெரியாருக்கோ, தி.மு.க-விற்கோ தனியான பெருமை எதுவும் சேரப்போவதில்லை. உலக வரலாற்றை படிப்பதற்குத்தான் பல்கலைக்கழகமே தவிர, பல்கலைக்கழகத்திற்காக வரலாறு நிகழ்வதில்லை.**

அப்படி அறியப்படவேண்டிய சிறப்பம்சங்கள் என்ன என்பதையும் சுருக்கமாகக் கூறிவிடுவோம். பெரும்பாலான உலகத் தலைவர்கள் மக்களை திரட்டி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவார்-கள் அல்லது தேசிய விடுதலையை சாதித்து புதிய அரசுருவாக்கத்திற்கு வகை செய்வார்கள். இதற்கு மாறாக பெரியார் மக்களின் சிந்தனையிலே புரட்சிகர மாற்றத்தை உருவாக்கி, புதிய விழுமி-யங்களின் அடிப்படையிலே குடியரசை உருவாக்க முயற்சித்தார். இதனை சமூக சீர்திருத்தம் என்று சொல்லிவிட முடியாது. புதிய குடியரசின் அடித்-தளத்தை உருவாக்குதல்.

இன்னும் தெளிவாகச்சொன்னால் இந்திய சமூகத்தில் பரவலாக வேரூன்றிய வர்ண தர்ம சிந்தனையை, பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு கற்பிக்கும், பிறப்பையே தண்டனையாக்கும் வர்ண தர்ம சமூக ஒழுங்கை முற்றிலும் அகற்றி, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப சமத்துவ விழுமியத்தை நிலைநிறுத்துவதே அவர் மேற்கொண்ட சிந்தனைப் புரட்சியின் அடிப்படை.

அவருடைய பணியின் விளைவாக "திராவிட-தமிழர்" என்ற ஒரு மக்கள் தொகுதி தன்னுணர்வு பெற்று பிராமணீய கருத்தியல் மேலாதிக்கத்தினை (Brahmin Hegemony) மறுதலிக்கும் ஆற்றலுடன் செயல்படுவது சாத்தியமானது. இருப்பினும் இந்திய ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்கள் உருவாக்கும் தளைகளை மீறி இந்த மக்கள் தொகுதி தொடர்ந்து தன் இலட்சியத்தை அடைய போராடி வருகிறது.

* இந்த உண்மை, பெரியார் மக்களின் சிந்தனைப் புரட்சியை நாடியவர், தேசிய அரசை உருவாக்க முனையாமல், குடியரசு விழுமியங்களை நிறுவமுயன்றவர், அதன்மூலம் மக்களின் மனங்களிலே சுயமரியாதைக் கனலை உருவாக்கியவர் என்ற உண்மை இன்னும் முழுமையாக உள்வாங்கப்படவில்லை.

* தேசிய அரசை உருவாக்குபவர்களே வரலாற்றில் கவனம் பெறுவார்கள் என்பதால் பெரியாரின் சிந்தனைப் புரட்சி போதிய கவனம் பெறவில்லை என்றும் கூறலாம்.

ஆனாலும் ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன்மறைவதில்லை என்பது போல பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் பேரொளி எல்லை கடந்தும் வீசத் துவங்கியுள்ளதை வியப்பதற்கில்லை. இந்த கருத்தரங்கத்தை ஒருங்கமைத்த அமைப்பு எது, பங்கேற்ற அறிஞர்கள் யார், யார் என்பதை நாம் சுருக்கமாக அறிய வேண்டும்.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான, உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளும், 36 கல்லூரிகளும் அடங்கியுள்ளன. அவற்றில் ஒரு கல்லூரிதான் செயிண்ட் ஆண்டனி கல்லூரி. அதில் உள்ள ஆசிய ஆய்வு மையம் **"சுயமரியாதை இயக்கமும், அதன் தாக்கங்களும்"** (Self Respect Movement and its Legacies) என்ற தலைப்பில் ஒருங்கமைத்த கருத்தரங்கம் செப்டம்பர் 4,5 தேதிகளில் நடந்தேறியது. அந்தக் கல்லூரியின் பேராசிரியர்கள் ஜிம் மாலின்ச-னும், ஃபைசல் தேவ்ஜியும் இந்தக் கருத்தரங்கின் அமைப்பாளர்கள் ஆவார்கள். இந்தக் கருத்தரங்கம் குறித்த செய்திகள் பல்வேறு நாளே-டுகளிலும் இடம்பெற்றுள்ளன.

உலகின் பல்வேறு முன்னணி கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆய்வாளர்கள் பலர் இதில் பங்கேற்று கட்டுரைகள் வாசித்துள்ளனர். அபி-மன்யு ஆர்ணி, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைகழகம்; கணேஷ்வர், ஹைதராபாத் பல்கலைக் கழகம்; சுந்தர் சருக்காய், பேர்ஃபுட் பிலாசஃபர்; எஸ்.ஆனந்தி, எம்.ஐ.டி.எஸ்; கிருபா முனுசாமி, மிடில்சக்ஸ் பல்கலைக்கழகம்; விக்னேஷ் ராஜாமணி, கிங்க்ஸ் காலேஜ், லண்டன்; கார்த்திக் ராம் மனோஹர், நேஷனல் லா ஸ்கூல்; ஜெ.ஜெயரஞ்சன், தமிழ்நாடு மாநில திட்டக்குழு; ஆ.இரா.வெங்கடாசலபதி, எம்.ஐ.டி.எஸ்; கிறிஸ்டொஃபே ஜெஃப்ர்லோ, சையின்ஸ் போ, பாரிஸ்; சூரஜ் யாங்டே, ஹார்வார்டு பல்கலைகழகம்; பிரான்சிஸ் கோடி, டொராண்டோ பல்கலைகழகம்; மார்த்தா ஆன் செல்பி, ஹார்வார்டு பல்கலைக்கழகம்; சாரா ஹோட்ஜஸ், கிங்க்ஸ் காலேஜ், லண்டன்; சுமதி ராமசாமி, டியூக் பல்கலைகழகம்; தாரிணி அழகர் சாமி, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்; கமலா விஸ்வேஸ்வரன், ரைஸ் பல்கலைகழகம்; சரோஜ் கிரி, டெல்லி பல்கலைக்கழகம் என முன்னணி ஆய்வாளர்கள் பங்கேற்று பங்களித்துள்ளனர்.

இந்த சிறப்புமிக்க கருத்தரங்கின் பகுதியாகத்தான் செப்டம்பர் 4ஆம் தேதி மாலை முதல்வர் ஸ்டாலின் சிறப்புரை ஆற்றியுள்ளார். பகுத்தறிவுப் பகலவன் பெரியார் உருவப் படத்தைத் திறந்து வைத்துள்ளார். செப்டம்பர் 5-ஆம் தேதி மாலை இறுதிச் சிறப்புரையை புகழ்பெற்ற மூத்த மானுடவியல் ஆய்வாளர், தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட அர்ஜுன் அப்பாதுரை அவர்கள் நிகழ்த்தியுள்ளார்.

இந்த நிகழ்வுகளின் பகுதியாக கார்த்திக் ராம் மனோஹரனும், ஆ.இரா. வெங்கடாசலபதியும் தொகுத்துள்ள **"கேம்பிரிட்ஜ் கம்பேனியன் டு பெரியார்"** என்ற ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டுள்ளது. பெரியார் குறித்த ஆய்வுப்புலத்திற்கு முக்கிய பங்களிப்பாக அமையக்கூடிய நூல் இது எனலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நிகழ்வில் முதலமைச்சர் பங்கேற்றது, பெரியார் படத்தை திறந்து வைத்ததும் திராவிட மாடல் அரசின் சித்தாந்த வேர்களை எடுத்துரைக்கும் சிறப்பு வாய்ந்தது. சுயமரியாதை என்ற சொல்லின் சிறப்பினை முதல்வர் எடுத்துரைத்து உரை நிகழ்த்தியுள்ளதை காணொலிகளில் காண முடிகிறது. திராவிடவிய அரசியலின் வரலாற்றுத் தொடர்ச்சியில் மற்றொமொரு மைல்கல்லாக இந்த நிகழ்வு அமைகிறது என்றால் மிகையாகாது.முதலமைச்சருடன் மனுராஜ் சண்முகசுந்தரம் உள்ளிட்ட திராவிட இயக்க ஆர்வலர்களும் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிகழ்ச்சி தரும் எழுச்சியை சகிக்க முடியாமல் பாஜக தலைவர் தமிழிசை பேசியிய ஒரு காணொலி ஒன்று இணையத்தில் பரவலாக கிடைக்கிறது. அவர் இந்த நிகழ்ச்சியை ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமே நடத்தவில்லை அந்த வளாகத்தில் ஒரு அரங்கை வாடகைக்கு எடுத்து திமுக நடத்தியுள்ளது என்றெல்லாம் பேசியுள்ளார் அதில் முதலமைச்சர் ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்விற்கும் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று வலியுறுத்தி சொல்கிறார்கள் கல்யாண மண்டபத்தில் ஒரு அரங்கத்தை வாடகைக்கு எடுப்பது போல் திமுகவினர் வாடகைக்கு எடுத்து அதனை ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிகழ்ச்சி என்று பொய் பிரச்சாரம் செய்வதாக கூறுகிறார்கள்.

முதலில் சுயமரியாதை உள்ள தமிழர்களாக நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். பெரியார் குறித்து கருத்தரங்கம் நடத்துவதால் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கு தான் பெருமையே தவிர அதனால் பெரியாருக்கோ திமுகவிற்குகோ தனியான பெருமை எதுவும் சேரப் போவதில்லை திராவிட இயக்கத்தின் பெருமை எல்லாம் தமிழ் சமூகத்தை வருடியிலிருந்து விடுவித்து மானமுள்ள சுயமரியாதை உள்ள தன்உணர்வு பெற்ற சமூகமாக மாற்றி வருவதுதான். உலக வரலாற்றைப் படிப்பதற்கு தான் பல்கலைக்கழகமே தவிர பல்கலைக்கழகத்திற்காக வரலாறு நிகழ்வதில்லை.

வர்ண தர்மத்தை இந்தியக் குடியரசு முற்றாக நிராகரிக்க வேண்டும் என்றவர் பெரியார். அதனையே குடியரசின் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்றவர் ஆர்.எஸ்.எஸ் சிந்தாந்தவாதி கோல்வால்கர். பொதுவாகவே இந்திய தேசியவாதிகள், சிந்தனையாளர்கள் பலரும் உறுதிபட மனு ஸ்மிருதி முன்-வைக்கும் வர்ண தர்மத்தை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று கூறிய-தில்லை. அவ்விதம் கூறுவது அந்த தர்மத்தை சமஸ்கிருதத்தில் எழுதி, இன்று வரை தங்களை அதன்படி உயர் பிறப்பாளர்களாகக் கருதிக் கொள்ளும் பிராமணர்களை வருந்தச் செய்யும் என்பதால் சற்றே நீக்கு போக்காகத்-தான் அதைப்பற்றிப் பேசுவார்கள். அதனை முற்று முழுதாக எதிர்த்து பேசியவர்கள் பூலே, பெரியார், அம்பேத்கர் ஆகிய பேராளுமைகள்தான்.

பெரியார் அதனை பெரியதொரு மக்கள் இயக்கமாக மாற்றி திராவிடர் கழகம் என்றும், திமுக என்றும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக விட்டுச் சென்றுள்ளார். அது இன்றுவரை வர்ண தர்ம மீட்பு வாத த்துடன் போராடுகிறது. அதுதான் அவர்களுக்கு இந்த காழ்ப்பு. இந்த மையப் பிரச்சினையை மறைத்து கடவுள் நம்பிக்கை, இந்து மதம் என்று ஏதேதோ பேசுவார்கள். ஆனால் திராவிட- தமிழ் மக்கள் ஏமாறுவதில்லை. அவர்கள் விரும்பும் தெய்வங்களை வழிபடுவார்கள்; பெரியாரின் சுயமரியாதை தத்துவத்தையும் புரிந்து கொள்வார்கள்.

பிரச்சினை மனிதர்களுக்குள் பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு கூடாது என்பதுதானே தவிர கடவுளை வணங்குவது இல்லை. கடவுள் பெயரால் பார்ப்பனர்கள் ஏற்றத்தாழ்வை உருவாக்குவதால்தான் பெரியார் கடவுளின் இருப்பையும் கேள்விக்கு உள்ளாக்கினார். அவர் அதையே தெளிவாக விளக்கவும் செய்தார். அவர் வாழ்ந்த காலத்தில் அனைத்து சமூகத்தையும் சார்ந்த முற்போக்கு சிந்தனையாளர்கள் அவரைக் கொண்டாடவே செய்த-னர். புகழ்பெற்ற எழுத்தாளர் பார்ப்பன வகுப்பைச் சார்ந்த வ.ராமசாமி, 1944-ஆம் ஆண்டு வெளியான தமிழ் பெரியோர்கள் என்ற நூலில் பெரி-யாரையே முதலில் சிறப்பித்து, கொண்டாடி எழுதியுள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியும் வர்ண தர்மத்தை அகற்றி விட்டு, திராவிட நெறியான பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதை மனப்பூர்வமாக ஏற்க வேண்டும். அதுவே உண்மையான தேச நலனாக இருக்கும். அப்போது பெரியாரும் தேசியத் தலைவராகத் தெரிவார்.

**- ராஜன் குறை கிருஷ்ணன்**
**மின்னம்பலம் இணையதளம்**

### ஆக்ஸ்போர்டு பல்கலையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் உணர்ச்சி உரை

# பெரியார் ஆயுதம் ஏந்தாத புரட்சியாளர்

**இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில்- தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்து - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு உரை!** முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.9.2025 அன்று இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து உரையாற்று-கையில் "தந்தை பெரியார்தரணிமயமாகி விட்டார்" என்று உணர்ச்சிமேலிடக் குறிப்பிட்டார்.





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:- பல நூறு ஆண்டுகளாக, உலகின் சிறந்த அறிவா-ளிகளை உருவாக்கும் இந்த ஆக்ஸ்ஃ-போர்டு பல்கலைக்கழகத்தில் பேசுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இப்போது புளகாங்கித உணர்வோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். பெரியாரின் பேரன் என்ற கம்பீரத்துடன் நிற்கிறேன்! இங்கே நான் தமிழ்நாட்டின் முதலமைச்சர், தெற்காசிய அரசியலை புரட்டிப் போட்ட இயக்கமான தி.மு.கழகத்தின் தலைவர் என்ற தகுதியுடன் மட்டுமல்ல; பெரியாரின் பேரன் என்கின்ற கம்பீரத்துடன் உங்கள் முன்னால் நான்நின்று கொண்டிருக்கிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் அறிவாசான் தந்தை பெரியாரின் படத்தை ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் திறந்து வைத்ததை, என்னுடைய வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன். பகுத்தறிவுப் பட்டொளி, உலகம் முழுக்கப் பரவி வருகிறது என்பதன் அடையாளம்தான் இந்தப் படத்திறப்பு விழா!

பெரியார் இன்று உலகம் முழுவதும் தேவைப்படுகிறார் என்பதன் அடையாளமாக, அவருடைய படத்தைத் திறக்கத் திட்டமிட்டிருக்கிறீர்கள்!

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் அறிவுடைய அடையாளம் மட்டுமல்ல; உரிமையின் அடையாளம் இது! மனித உரிமையின் அடையாளம்! உலக அடையாளம்! அப்படிப்பட்ட பெரியாரின் படம் இங்கு திறக்கப்படுவது என்பது உள்ளபடியே பெருமைக்குரிய ஒன்றாகும்!

பெரியார் உருவாக்கிய சுயமரியாதை இயக்கத்தை உலகமயமாக்கும் நோக்கத்துடன் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ள பேராசிரியர்கள் பைசல் தேவ்ஜி, ஜேம்ஸ் மல்லின்சன் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றி!

சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பில் இருக்கின்ற எனக்கு, இதைவிடப் பெருமை எதுவும் இருக்க முடியாது. பெரியாருக்கு உணவு பரிமாறிய பெருமை எனக்குண்டு!தந்தை பெரியாரின் கொள்கை வாரிசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். பலமுறை பெரியாரை நான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக, எங்கள் வீட்டில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சிக்கு அவர் வந்திருக்கிறார். அந்த நேரத்தில் நான் அவருக்கு உணவு பரிமாறிஇருக்கிறேன். இதைச் சொல்லும் போதே எனக்கு பெருமையாக இருக்கிறது!

ஒரு இனத்துக்கே சுயமரியாதை உணர்வை ஊட்டி தலைநிமிர வைத்த தந்தை பெரியாரை இன்றைக்கு உலகம் கொண்டாடி வருவதுதான் தமிழ்நாட்டிற்கும், திராவிட இயக்கத்திற்கும் கிடைத்திருக்கக் கூடிய மிகப்பெரிய பெருமை!

இங்கிலாந்தில் இருக்கின்ற செயின்ட் அந்தோணி கல்லூரியும், பெல்லியோல் கல்லூரியும் இணைந்து ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் இரண்டு நாள் மாநாட்டை ஒருங்கிணைக்கிறார்கள் என்று என்னிடம் சொன்னபோது, எனக்கு அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஆக்ஸ்ஃபோர்டில் தந்தை பெரியாரின் பகுத்தறிவு ஒளி! நினைத்துப் பார்க்கிறேன்...1983 செப்டம்பர் 21ஆம் நாள், இதே ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் மானமிகு ஆசிரியர் வீரமணி அவர்கள் கலந்து கொண்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நடந்தது. அது நடந்து கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அதற்குப் பிறகு, இன்றைக்கு மீண்டும் ஆக்ஸ்ஃபோர்டில் தந்தை பெரியாரின் பகுத்தறிவு ஒளி பரவுகிறது!

தந்தை பெரியாருக்கு மிக மிகப் பிடித்த சொல் என்ன என்று கேட்டீர்கள் என்றால், சுயமரியாதை! "உலகத்தில் எந்த அகராதியைக் கொண்டுவந்து காட்டினாலும், இதைவிட சிறந்த சொல்லைக் காட்ட முடியாது" என்று சொன்னார் தந்தை பெரியார். "ஒரு மனிதனுக்கு சுயமரியாதை எண்ணத்தை ஊட்டிவிட்டால், அவன் வெற்றி பெற்றிடுவான்" என்று சொன்னார்.

அதுமட்டுமல்ல, "உலகத்திலேயே உயிரைக் கொடுத்து பெற வேண்டிய ஒன்றே ஒன்று சுயமரியாதை தான்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்.

மனிதனின் சுயமரியாதையைக் காக்கத்தான் அனைத்து அரசியல் தத்துவங்களும் தேவை என்று சொல்லி, தான் உருவாக்கிய இயக்கத்துக்கே சுயமரியாதை இயக்கம் என்று பெயர் வைத்தார்.

அப்படிப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டை முன்னிட்டு, இந்த மாபெரும் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உலகப் புகழ்பெற்ற ஆய்வாளர்களால் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியும், மனநிறைவும் நான் பெறுகிறேன்.

தமிழ்நாடு அரசின் திட்டக்குழு துணைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களும், பேராசிரியரும், வரலாற்று ஆய்வாளருமான பேராசிரியர் ஆ.இரா.வெங்கடா சலபதி அவர்களும், பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகளை ஆய்வு செய்த பேராசிரியர் எஸ்ஆனந்தி அவர்களும் இன்றைக்கு இங்கே வந்திருக்கிறார்கள்.

இந்த விழாவுக்கு மகுடம் சேர்க்கின்றது போல, தமிழ்நாட்டின் மிகச்சிறந்த ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் முனைவர்ஆ.இரா. வெங்கடாசலபதி அவர்களும், முனைவர்கார்த்திக் ராம் மனோகரனும் இணைந்து உருவாக்கியிருக்கக் கூடிய, ***"The Cambridge Companion to Periyar"*** என்ற ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு ஆங்கில நூல் வெளியீட்டு விழா அமைந்திருக்கிறது. இதை வெளியிடுகின்ற பெருமையும் எனக்குக் கிடைத்திருக்கிறது! பெரியார் உலகமயமாகி-விட்டார் என்பதன் அடையாளம்!

இந்த சிறப்பான நூலை, இந்த ஆண்டு 'சாகித்ய அகாடமி' விருது பெற்றவரான ஆ.இரா. வெங்கடாசலபதி அவர்களுடைய முயற்சியால், பெரியார் குறித்த நூலை *Cambridge University Press* வெளியிட்டிருக்கிறது. பெரியார் உலகமயமாகி விட்டார் என்பதன் அடையாளம்தான் இது!

தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் பிறந்தார். தமிழில் பேசினார். ஆனால் அவருடைய சிந்தனைகள் எல்லைகளுக்கு அப்பாற்பட்டது; மானிடச் சமுதாயத்திற்கானது! உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது! அதுதான் பெரியாரியம்!

பெரியாரியம் என்றால் என்ன என்று யாராவது கேட்டால்,அவர்களுக்கு நாம் அறிமுகப்படுத்த வேண்டிய அடிப்படைகள் என்னவென்றால்

- சுயமரியாதை
- பகுத்தறிவு
- சமதர்மம்
- சமத்துவம்
- மானுடப்பற்று
- இரத்த பேதமில்லை
- பால் பேதமில்லை
- சுய முன்னேற்றம்
- பெண்கள் முன்னேற்றம்
- சமூகநீதி
- மதசார்பற்ற அரசியல்
- அறிவியல் மனப்பான்மை

- என்று பெரியாரியத்தை அறிமுகப்படுத்த வேண்டும். பரந்து விரிந்த அறிவுக் கடலான அவருடைய சிந்தனைகளை உள்வாங்க, இந்த அறிமுகம் நிச்சயம் பயன்படும்!

இந்தச்சிந்தனைகளின் அடிப்படையிலான சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளாக, ஆறு குறிப்புகளை, 'குடிஅரசு' இதழில் பெரி-யார் எழுதினார். பெரியார் கொள்கை, உலக-ளாவிய கொள்கை! அவற்றை நான் சொல்ல-வேண்டும் என்றால், முதலில், சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு, தாழ்வும் இருக்கக் கூடாது.

இரண்டாவது, ஏழை, பணக்காரன் ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லாப் பொருளும்,பூமியும் எல்லோருக்கும் சரிசமமாக இருக்கவேண்டும்.

மூன்றாவது, ஆணுக்கும், பெண்ணுக்கும் சகல துறைகளிலும் சமத்துவம் இருக்க வேண்டும்.

நான்காவது, ஜாதி, மதம், தேசம், வருணம், கடவுள் ஆகியவை இல்லாத மனித சமூக ஒற்றுமை நிலவ வேண்டும்.

மக்கள் சுயமரியாதையுடன் வாழ, இறுதிக்காலம் வரை போராடியவர் தந்தை பெரியார்!

ஐந்தாவது, அனைத்து மனிதரும் உழைத்து அதன் பயனை அனைவரும் சமமாகப் பயன்படுத்தவேண்டும்.

ஆறாவது, யாரும் எதற்கும் அடிமை ஆகாமல், அவரவர் அறிவு, ஆராய்ச்சி, உணர்ச்சி, காட்சி ஆகியவற்றுக்கு இணங்கி நடத்த முழு சுதந்திரம் இருக்க வேண்டும்.

இதையெல்லாம் உலகம் முழுவதும் அனைத்து நாடுகளுக்கும், அனைத்து மக்களுக்கும் பொதுவான கருத்தியல்கள்! அதனால்தான் பெரியார் கொள்கை, உலகளாவிய கொள்கை என்று சொல்கிறோம். பழமைவாதம் நிரம்பிய மண்ணில் எழுச்சி பெற வைத்தவர்!

இவ்வளவு முற்போக்கான கருத்தியல்களை, நூறு ஆண்டுகளுக்கும் முன்பே, அதுவும் பழமைவாதங்களும், மூடநம்பிக்கைகளும் நிரம்பியிருக்கின்ற மண்ணில் பேசி, மக்களை எழுச்சி பெற வைத்தவர் தந்தை பெரியார்!

சுயமரியாதை இயக்கத்தை அவர் சாதாரணமாக தோற்றுவிக்கவில்லை. உலகம் முழுவதும் பயணம் செய்தார். உலகம் எப்படி இருக்கிறது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்து, தமிழ்நாட்டிற்கு எடுத்துச் சொன்னார்! தமிழ்நாடும் தலைநிமிர்ந்தது! அதனால்தான் அவர் தந்தை பெரியார்!

தந்தை பெரியாரின் உலகப் பயணங்களை சுருக்கமாக பட்டியலிட்டுச் சொல்லவேண்டும் என்றால், 1929-ல் - மலேசியா, சிங்கப்பூருக்கும் 1932-ல் எகிப்து, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து, போர்ச்சுக்கல்,சோவியத் ரஷ்யா என்று ஓராண்டு முழுவதும் பயணம் செய்தார். அப்போது, இந்த இங்கிலாந்து நாட்டில், ஜூன் 16 முதல் ஜூலை 6 வரைக்கும் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்தார். இங்கேதான், கம்யூனிஸ்ட் தலைவர் லெனின் எழுதிய 'மதம்' என்ற நூலை வாங்கினார்.

இங்கே இருக்கின்ற பார்ன்ஸ்லேவில் நடந்த கூட்டத்தில் பங்கேற்று பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கிடையே துணிச்சலாகப் பேசினார். அந்தக் கூட்டத்தில் இருந்த நிறையபேர், லேபர் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள். அப்-போதும் இந்தியாவில் நடந்து கொண்டிருந்தது பிரிட்டிஷ் ஆட்சி.

ஆனால், அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், "இங்கே தொழிலாளர் கட்சி ஆட்சியை நடத்துவதாகச் சொல்கிறீர்கள். ஆனால், இந்தியாவில் தொழிலாளர்களுக்கு விரோதமாக ஆட்சி நடத்துகிறீர்கள்" என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார். இந்தத் துணிச்சல்தான் தந்தை பெரியார். அதனால்தான், காலங்கள் கடந்தும், என்றென்றும் பெரியார் என்று எல்லோராலும் நினைக்கப்படுகிறார். இன்னும் எத்தனை நூறு ஆண்டுகள் கடந்தாலும், தந்தை பெரியார் தொடர்ந்து நினைக்கப்படுவார்; போற்றப்படுவார்!

அவர் இந்தச் சமூகத்தில் விதைத்தது நாத்திகம் இல்லை; பகுத்தறிவு! அதனால்தான் "நானே சொன்னாலும், உன் புத்திக்கு சரி என்று பட்டால் ஏற்றுக்கொள், இல்லையென்றால் விட்டுவிடு" என்று சொன்னார் தந்தை பெரியார். அறிவியல் மனப்பான்மையை விதைத்தார் பெரியார்!

வெறும் நம்பிக்கையை கண்டுபிடிப்பாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்லி, எல்லாவற்றையும் கேள்வி கேட்கச் சொன்னார். எல்லாவற்றுக்கும் விடையைக் கண்டுபிடிக்க வேண்டும். எதையும் லாஜிக்கலாக அணுகவேண்டும். இந்த அறிவியல் சிந்தனை யைத்தான் பரப்பினார்; அறிவியல் மனப்பான்மையைத்தான் அவர் விதைத்தார்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற அத்தனை அறிவியல் மாற்றங்களையும், 'இனிவரும்உலகம்' என்று தொலைநோக்குப் பார்வையுடன்சொன்ன சிந்தனையாளர் தந்தை பெரியார்.

- தொடர்ச்சி 6-ம் பக்கத்தில்

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# எல்லைகளைக் கடந்த சிந்தனையாளர் பெரியார்!

*5-ஆம் பக்க தொடர்ச்சி*

*பகுத்தறிவும், அறிவியலும் ஒரே நேர்கோட்டில் இருக்கும். அறிவின் கூர்மைதான் பகுத்தறிவு என்று எடுத்துச் சொன்னதால்தான், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் அவரைப் பற்றி அவர் மறைந்து இத்தனை ஆண்டுகள் கழித்தும் விவாதிக்கிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் புத்தகம் வெளியிடுகிறது.*

*சுயமரியாதை இயக்கத்தை 1925-ஆம் ஆண்டு தொடங்கினாலும், சுயமரியாதைச் சிந்தனையானது பெரியாருக்கு இளமைக் காலத்திலேயே வந்துவிட்டது. அவர் அப்போதே அப்படித்தான்! அவருடைய சுயசரிதையை கொஞ்சம் பார்த்தால், அவர் காலத்தை மீறி செய்த புரட்சிகள் புரியும்!*

*ஆதிக்க ஜாதியினர் வீட்டில் தண்ணீர் குடித்ததால் அவமானப்படுத்தப்பட்டதும், தாழ்த்தப்பட்டோர் வீட்டில் தண்ணீர் குடித்ததால் சொந்த வீட்டில் அவமானப்படுத்தப்பட்டதும் சிறிய வயதிலேயே அவர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.*

*பெரியாரின் தங்கை மகள் அம்மாயிக்கு 10 வயதிலேயே, 13 வயது பையன்கூட திருமணமாகி, மணமான அறுபதாவது நாளே மணமகன் இறந்து விட்டார். மறுமணத்துக்கு குடும்பத்தில் உள்ள எல்லோரும் எதிர்ப்புத் தெரிவித்தாலும், அதையெல்லாம் மீறி, அந்தப் பெண்ணுக்கு இரண்டாவது திருமணம் நடத்தி வைத்தார். மாற்றுச் சமூகத்தினரின் காதல் திருமணங்களை ஊரார் எதிர்ப்பை மீறி நடத்தி வைத்தார்.*

*இடஒதுக்கீடு உரிமைக்காக சுயமரியாதை இயக்கம் கண்டார்! தெருக்களுக்கு வைக்கப்பட்ட ஜாதிப் பெயர்களை நீக்கினார். நகராட்சிப் பள்ளிகளில் தீண்டப்படாத வகுப்புக் குழந்தைகள் சேரவும், படிக்கவும் வழி கண்டார். இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் சேர்ந்த பெரியார், அப்போதும் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புவதில் முனைப்பாக இருந்தார். சேரன்மாதேவி குருகுலத்தில் எல்லோருக்கும் சமமான உணவு தரப்படவேண்டும், வைக்கத்தில் எல்லோரையும் கோயில் தெருவிற்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று போராடினார்.*

*இடஒதுக்கீடு உரிமைக்காக காங்கிரஸ் மாநாடு களில் தீர்மானம் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானங்கள் எல்லாம் தோற்கடிக்கப்பட்டது. அங்கேயும் உயர் ஜாதியினரின் ஆதிக்கம் இருப்பதைப் பார்த்து, அரசியல் விடுதலை மட்டும் போதாது, சமூக விடுதலையும் தேவை என்று அதிலிருந்து அவர் வெளியேறினார். அப்படி உருவானதுதான், இன்றைக்கு நாம் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற சுயமரியாதை இயக்கம்!*

*சமூகநீதி பெண்களுக்கு சொத்துரிமை, தீண்டாமை ஒழிப்பு, பொது இடங்களில் பட்டியலினத்தவருக்கு தடை இருக்கக் கூடாது. நில உரிமை , கைம்பெண் மறுமணம, தமிழுக்கு முக்கியத்துவம் சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு, இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு ஆகியவை-தான் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்-கைகள். மானமும் அறிவும் உள்ள மக்களாக்கிட ஓயாமல் உழைத்தார்!*

*இந்தக் கொள்கைகளுக்காக பெரியார் அலைந்த அலைச்சல் நினைத்தே பார்க்க முடியாதது, யாரும் அலையாதது. 14.2.1937 அன்று மட்டும், ஒரே நாளில், 17 சிற்றூர்களில், பெரியார் பேசி இருக்கிறார். 16.2.1962 அன்று மட்டும் 19 கூட்டங்களில் பெரியார் பேசி இருக்கிறார். அதுவும் அப்போது அவருக்கு என்ன வயது? 82 வயது! 82 வயதிலும் பேசியிருக்கிறார்! 95 வயதிலும் 98 நாட்கள் அலைந்திருக்கி-றார் தந்தை பெரியார். இவ்வளவு உழைப்பு எதற்காக? நம்முடைய மண்ணில் வாழுகின்ற மனிதர்களைமானமும், அறிவும் உள்ள சுயமரி-யாதை மிக்க மக்களாக்கத்தான் அவர் ஓயாமல் உழைத்தார்.*

**போலிப் பெருமைகளில் சிக்கி மறுபடியும் பின்னோக்கிப் போய்விடக் கூடாது. நம்மை பின்னோக்கி இழுக்க அத்தனை விதமான தந்திரங்களையும் மேற்கொள்ளுவார்கள். கொஞ்சம் ஏமாந்தாலும், நம்முடைய அத்தனை உழைப்பும் கேள்விக் குறியாகிடும். ஜாதி வேறுபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் முற்றிலுமாக விலக்குகின்ற பயணத்தின் பல்வேறு படிநிலைகளை நாம் படிபடியாகத் தாண்டி வரவேண்டும். அதற்காகத்தான் இந்த நிகழ்ச்சி**

### ஆயுதம் தாங்காத, இரத்தம் சிந்தாத புரட்சிகள்

*உலகத்தில் எந்த சீர்திருத்த இயக்கத்துக்கும் இல்லாதப் பெரு-மையும், புகழும் பெரியார் இயக்கத்துக்கு உண்டு. பெரியாரின் இந்தச் சாதனைகள் எல்லாம், ஆயுதம் தாங்காத புரட்சிகள்! இரத்தம் சிந்தாத புரட்சிகள்!*

*அவருடைய சீர்திருத்தக் கொள்கைகள் எல்லாம், சட்டங்கள் ஆவதை பார்த்த பெருமை பெரியாருக்கே உண்டானது! இது உலகத்தில்எந்தச் சீர்திருத்த இயக்கத்துக்கும் கிடைக்காத புகழ்!*

*நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும்தான், ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் இயக்கமாக எழுச்சி பெற்று, வெகுசன மக்களிடம் பரப்புரை செய்து, அவர்களுடைய ஆதரவை வாக்குகளாகப் பெற்று, சீர்திருத்தக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தி, அவற்றை சட்டமாகவும் ஆக்கி அந்தச் சமுதாயத்தை மேன்மையடைய வைத்திருக்கிறது.*

*சமூகநீதிக் கொள்கையை தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமான கொள்கையாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற வைத்தவர் தந்தை பெரியார். ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப் போராடினார் தந்தை பெரியார். ஆட்சி அதிகாரத்தை அடைந்து, அதைச் செய்து காட்டினார் பேரறிஞர்அண்ணா. முத்தமிழறிஞர் கலைஞர் “அனைத்துச் ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்” என்று சட்டம் கொண்டு வந்தார். பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வேண்டும் என்று பெரியார் தீர்மானம் கொண்டு வந்தார். அதைச் சட்டம் ஆக்கியவர் முதலமைச்சராக இருந்த கலைஞர். அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை, அனைவருக்கும் அதிகாரம் வேண்டும் என்று பெரியார் சொன்னார். அதைச் சட்டம் ஆக்கி நிறைவேற்றித் தந்தது திராவிட இயக்கத்தின் ஆட்சி. தந்தை பெரியாரின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்த தலைவர்கள்!*

*இது எல்லாவற்றையும்விட, நான் பெருமையோடு சொல்கிறேன், ஜாதியைக் கடப்பதற்காக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் செய்யாத முன்னெடுப்பாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் “சுயமரியாதைத் திருமணச் சட்டத்தையும்”, தலைவர் கலைஞர் அவர்கள் “சமத்துவபுரம்” திட்டத்தையும் கொண்டுவந்து, தந்தை பெரியாரின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்திருக்கிறோம்!*

*இந்த ஐரோப்பியப் பயணத்தில் நான் பார்ப்பது, ஒடுக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து முன்னேறிவந்து ஏராளமான பேர் இங்கே நல்ல நிலையில் இருக்கிறார்கள். தமிழ்நாடு எல்லாவற்றிலும் முன்னேறிக் கொண்டு வருகிறது. கல்வியில், பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சியில், வாழ்க்கைத் தரத்தில், உள்கட்டமைப்பு வசதியில் முன்னேறி இருக்கிறோம். உழைப்பின் சாதனை, உற்பத்திச் சாதனையாக மாறி இருக்கிறது.பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. வளமான தமிழ்நாடாக வளர்த்து வருகிறோம். மற்ற மாநிலங்கள் வியந்து பார்க்கும் மாநிலமாக உயர்ந்திருக்கிறோம். இதுதான் திராவிட இயக்கத்தின் சாதனை!*

*பெரியார் கண்ட வளர்ச்சியை நாங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்திக் காட்டி வருகிறோம். “பெரியாருக்கே இந்த ஆட்சி காணிக்கை” என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழர் தந்தை பெரியார் மறைந்தபோது, அரசு மரியாதைக்கு ஆணை பிறப்பித்தார் தமிழினத் தலைவர் கலைஞர். பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாளாக அறிவித்து, செப்டம்பர் 17 அன்று தமிழ்நாட்டையே உறுதிமொழி எடுக்க வைத்திருக்கிறது நம்முடைய திராவிட மாடல் அரசு. அதற்காக, பெரியார் கண்ட கனவுகள் எல்லாவற்றையும் நாம் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லமாட்டேன்.*

*இந்த நூறாண்டுகளில் ஒரு சமூகமாக நாம் அடைந்திருக்கின்ற வளர்ச்சி என்பது, ஒரு குழந்தை நடை பழகுகின்ற மாதிரிதான்! நம்முடைய பயணம் நெடியது. நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது. இந்தப் பயணத்தில் ஏற்படுகின்ற தேக்கங்களை - தேவையற்ற இடைஞ்சல்களை - பழைய குளறுபடிகளை நாம் ஒதுக்கவேண்டும். போலிப் பெருமைகளில் சிக்கி மறுபடியும் பின்னோக்கிப் போய்விடக் கூடாது. நம்மை பின்னோக்கி இழுக்க அத்தனைவிதமான தந்திரங்களையும் மேற்கொள்ளுவார்கள். கொஞ்-சம் ஏமாந்தாலும், நம்முடைய அத்தனை உழைப்பும் கேள்விக் குறியாகிடும். ஜாதி வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக விலக்கு-கின்ற பயணத்தின் பல்வேறு படிநிலைகளை நாம் படிப்படியாகத் தாண்டி வரவேண்டும். அதற்காகத்தான் இந்த நிகழ்ச்சி. இதற்கான முயற்சிகளில் திராவிட முன்னேற்றக் கழகமும், நம்முடைய திராவிட மாடல் அரசும் தொடர்ந்து பயணிக்கிறது.*

*100 ஆண்டுகளுக்கு முன்பு, சுயமரியாதை இயக்கம் எந்த நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்டதோ, அந்த நோக்கம் படிப்படியாக நிறைவேறி வருகிறது.*

- *பிறந்த நாடு*
- *பேசும் மொழி*
- *வாழும் சூழ்நிலை*

*இன்றைக்கு உலகம் ஒப்புக் கொண்ட உண்மைகள்! இதற்கெல்லாம் கட்டுப்பட்டு அறிவுரை சொன்ன-வர்கள் மத்தியில், இதற்கெல்லாம் வெளியே நின்று அறிவுரை சொன்னவர் பெரியார். திருவள்ளுவர் திருக்குறளை தமிழில் எழுதினாலும், அது உலகப் பொதுமறையாக இருப்பதைப்போல, பெரியார் சிந்தனைகள் உலகம் முழுக்கத் தேவையானவை. உலகச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளத் தக்கவை. உலகமே கூட்டுறவு மயம் ஆகவேண்டும் என்று சொன்னார் பெரியார். மனிதப்பற்று தவிர வேறு எந்தப் பற்றும் தேவையில்லை என்று சொன்னார். பெரியார். நிறபேதம் இல்லை! இரத்தபேதம் இல்லை! பால் பேதம் இல்லை! என்று பெரியார் சொன்னதெல்லாம் இன்றைக்கு உலகம் ஒப்புக்கொண்ட உண்-மைகள்..*

*அஃபிர்மேட்டிவ் ஆக்சன் என்று சில நாடுகளில் இப்போதும் இருக்கிறது. கேம்பஸ் டைவர்சிட்டி, ஸ்டூடண்ட் டைவர்சிட்டி என்று பல முன்னணி கல்லூரி, பல்கலைக் கழகங்களிலும் இருக்கிறது. பல்-வேறு உலக மொழிகளில் பெரியாரின் கருத்துகளை தமிழ்நாடு அரசு மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறது. இன்றைக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் வெளியிட்டு இருப்-பது போல, மற்ற பல்கலைக்கழகங்களும் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*“சுயமரியாதை உணர்ச்சிதான் உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாக மாற்றும். அப்போதுதான் இந்த இயக்கத்தின் உண்மைச் சக்தியும், பெருமையும் வெளிப்படும்” என்று பெரியார் சொன்னார். பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை வென்றெடுக்க இதுபோன்ற கருத்தரங்குகள் வழிவகுக்கும்.*

*தமிழ்நாடு முதலமைச்சராக எத்தனையோ வெளிநாடுகளுக்கு நான் சென்றிருக்-கிறேன். அங்கே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இருக்கிறேன். ஆனால், இந்த நிகழ்ச்சி, என்னை உணர்ச்சி வயப்பட வைத்திருக்கிறது. அந்த உணர்ச்சி யாரென்றால் தந்தைபெரியார். காரணம், இது பெரியாருக்கான நிகழ்ச்சி! மானுடத் தன்மையை மதிப்பதாக உலகம் மாறட்டும்!’*

*இலண்டனில் இருக்கின்றேனா இல்லை, தமிழ்நாட்டில்தான் இருக்கின்றேனா என்று ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அந்த வகையில், இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : September 12, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran